செ.வெ.எண்:55/ஜீன் / 2019 நாள்:15.06.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், 2019ஆம் ஆண்டிற்கான முதலமைச்சரின்**
**மாநில இளைஞர் விருதுகள் பெற தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

------------

திருச்சிராப்பள்ளி மாவட்டம், 2019ஆம் ஆண்டிற்கான முதலமைச்சரின் மாநில இளைஞர் விருதுகள் பெற தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 2014-2015ஆம் ஆண்டு சட்டமன்ற பேரவையில் விதி 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களின் பணியை அங்கீகரிக்கும் பொருட்டு 2015 ஆம் ஆண்டு முதல் முதலமைச்சர் மாநில இளைஞர் விருது ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூபாய் 50 ஆயிரம் ரொக்கமும், பாராட்டுப் பத்திரமும் மற்றும் பதக்கத்தை உள்ளடக்கியதாக இருக்கும்.

அதன்படி 2019ம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது வரும் 15.08.2019 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

இவ்விருதிற்கு 15 வயது முதல் 35 வயது வரையுள்ள ஆண், பெண் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். 01.04.2018 அன்று 15 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் மற்றும் 31.03.2019 அன்று 35 வயதிற்குள்ளாக இருத்தல் வேண்டும். கடந்த நிதியாண்டில்(2018-2019) அதாவது 01.04.2018 முதல் 31.03.2019 வரை மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டும் பரிசீலிக்கப்படும். விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்த பட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும்(சான்று இணைக்கப்பட வேண்டும்).

விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருப்பவர்களாக இருத்தல் வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு கண்டறியப்படக் கூடியதாகவும், அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். மத்திய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது. விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கில் கொள்ளப்படும்.

இதற்கான விண்ணப்பத்தினை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய இணையதளமான **www.sdat.tn.gov.in** ல் ஆன்லைன் மூலம் மட்டுமே விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். இணைதளம் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 02.07.2019 மாலை 5.00 மணி ஆகும்.

தகுதியான விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையிலான குழு பரிசீலித்து மாநில அளவிலான குழுவுக்கு பரிந்துரைக்கும், அவ்வாறு மாவட்டக் குழுவினரால் பரிந்துரைக்கப்பட்ட கருத்துருக்கள் மாநில குழுவில் வைக்கப்பட்டு, அக்குழுவினரால் பரிந்துரைக்கும் கருத்துருக்களுக்கு விருதுகள் வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், அண்ணா விளையாட்டரங்கம், திருச்சிராப்பள்ளி என்ற முகவரியில் உள்ள தொலைபேசி எண் **0431 – 2420685** தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

15/6/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**